சைவ சமய வார இதழ்.

Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 2/303 of 1953. | விரோதிஞ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது | தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசூ] யாழ்ப்பாணம்:- குரோதி ளூ மாசி மீ அஉ வெள்ளிக்கிழமை (19 February. 1965) [இல-சசூ]

## திருவள்ளுவர்

### தமிழ் நாட்டுக்குமட்டும் உரியவரல்லர்

"திருவள்ளுவர் தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியவரல்லர், உலகம் முழுவதற்கும் உரியவராவர் உலக இயக்கத்திற்குச் சூரியன் இன்றியமையாதது; பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள இடைத்தூரம் (90000000) 9 கோடிக்கு மேற்பட்ட மைல்களாகும். சூரியனுடைய ஒளி பூமியை அடைய 8 நிமிடங்கள் எடுக்கும். விருச்சிகத்துள் பூமியும் சூரியனும் அடங்கும், இப்பெரிய உண்மையை வள்ளுவர் முதற்குறளுக்குள்ளே அடக்கிவிட்டார். நாம் கடவுளைவணங்காவிட்டாற் காணுக்கண் - கேளாச்செவிபோல் நம் பொறிகள் பயனற்றவைகளாகிவிடும்."

இவ்வாறு 'சிவநெறிக்காவலர்' திரு த. முத்துச்சாமிப் பிள்ளை அவர்கள் நாவலர் கருத்துப்படி மாசி உத்தரத் தினத்தன்று (18-2-65) நாவலர் மண்டபத்திலே, யாழ் - சைவபரிபாலன சபையாரால் கொண்டாடப்பட்ட வள்ளுவர் விழாவில் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்வி பயிலும் க. இராசேசுவரன், செ. சிவரத்தினம் ஆகிய இரு மாணவர்களும், திருமதி ஆர். வைத்திலிங்கம் திரு. வை. ஏரம்பமூர்த்தி, திரு. க சிவராமலிங்கம் போன்ற பல பெரியார்களும் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்கள்.

இப் பெரியார்களுடைய சொற்பொழிவுகளின் சுருக்கம் அடுத்தவார இந்துசாதனத்தில் வெளிவரும்.

x x x

## வடமாநிலச் சைவஇளைஞர் மாமன்ற ஆதரவில் திருவள்ளுவர் குருபூசை

திருக்குறள், மனித வாழ்க்கை மாயை அல்ல, உண்மையானது என்றும், மனிதன் மனிதனுக்குக் காட்டுகிற அன்பின் மூலம் இறைவனை அடையலாம் என்றும், அன்பு சமூக சேவையாகப் பரிணமிக்க வேண்டும் என்றும், ஒழுக்கமே மனிதனுடைய உன்னத லட்சியமாக இருக்கவேண்டும் என்றும் கூறுகின்றது, இப்படியான பெருமையுடைய திருக்குறளின் ஆசிரியருடைய உருவத்தை அரசாங்கம் முத்திரையில் பொறித்துக் கௌரவிக்க வேண்டும் என்று ஷை மன்றத் தலைவர் திரு வை இரகுநாத முதலியார் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

இவ்விழா யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராசேஸ்வரியம்பாள் தேவிஸ்தான மகா மண்டபத்தில் வடமாநிலச் சைவ இளைஞர் மாமன்றத்தின் ஆதரவில் மிகச் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது

தேவியாராதனையின் பின்னர் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகத் தொண்டர்களின் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெற்றது. அதைத்தொடர்ந்து திருவள்ளுவர் திருவுருவப் படத்துக்குப் பூசை ஆராதனை நடைபெற்றது.

நாவலர்கருத்துப்படி மாசி உத்திரதினமாகிய நேற்று (18-2-65) மாலை ½ மணிக்கு ஆரம்பமாகிய இவ்விழாவில் ஆண்கள் பெண்கள் சிறுவர்கள் உட்பட ஏராளமானோர் சமூகமாயிருந்தார்கள்.

திரு. க. சொக்கலிங்கம் ஆசிரியர் பேசும்பொழுது "தனக்குவமை இல்லாதான் தாள்" களைச் சேரவேண்டிய அவசியத்தை உதாரணங்களுடன் வலியுறுத்தினர்.

திரு சி. சிவரத்தினம் ஆசிரியர் சொற்பொழி வாற்றும்பொழுது. "மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்தறன்" என்பதனை விளக்கினர் மேலும் சைவர்களின் கொள்கைப்படி திருவள்ளுவர் முத்தியடைந்த தினமான மாசி உத்தரமே 'திருவள்ளுவர் தினமாக'க் கொண்டாடப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்திச் சொன்னர்.

அடுத்து ஆசிரியர் திரு. ச. சதாசிவம் அவர்கள் பேசும்பொழுது;

"இரத்தல் இழிவு, மறுத்தல் அதனினும் இழிவு என்ற சங்க நூல்களின் கருத்தை "ஆவிற்கு நீரென் றிரப்பினும்......" எனனும் குறட்பாவால் நன்கு அறியலாம்.

'அழகுட்பொருட்களிலே பற்று வைககாது செயல் முறையில் நற் பயன் தரும் பொருட்களிலேயே ஒருவன் பற்று வைக்க வேண்டும்; இதனைக் 'கணை கொடிது' என்ற குறட் பா விளக்குகின்றது. "கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்' என்ற பாவினல் கண்ணோட்டத்தின் பெருமை யறியக்கிடக்கின்றது. ஒருவன் சூதாடுபவன் என்ற கெட்ட பெயரையடைந்து 'ஒன்னற எய்தி நூற்றை யிழக்கின்றான்' நல்ல பெயரையும் இழந்து தீயவழியினுல் பொருளீட்டக் கருதி உள்ள (தனைத்) தையுமிழந்து துன்பத்துக்காளாகின்றான்". என்றும் கொள்ள வேண்டியிருக்கின்றது எனவும் விளக்கினர்கள்.

திரு. மு. யோகராசா அவர்களின் நன்றியுரையின் பின்னர் தேவாரத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது. (நி. நி)

## நற்சிந்தனை

ஐஞ்செழுத் தாலே அரனடி
காணலாம்
ஐஞ்செழுத் தாலே அகிலத்தை
ஆளலாம்
ஐஞ்செழுத் தாலே அகவினை
தீர்க்கலாம்
ஐஞ்செ ழுத்துமென் நெஞ்சம்
புகுந்ததே.

## வண்ணை வைத்தீஸ்வரசுவாமிகோவில் தேர்த்திருப்பணி

ஷை ஆலயத்துக்குப் புதிதாக ஐந்து தேர்கள் (பஞ்சரதம்) திருவிடைமருதூர் இரா, கோவிந்தராஜன் (இந்தியாவில் சிறந்த சிற்பாசிரியர்) அவர்களாலும் அவருடைய சிற்பவித்தை நிரம்பிய உதவியாளர்களாலும் சுமார் இரண்டுலட்ச ரூபாய் செலவில் நிர்மாணிக்கத் திருவருள் பாலித்துள்ளதெனவும், அதற்காக ஒரு திருப்பணிச்சபை நியமிக்கப்பட்டிருக்கிறதெனவும், ஷை திருப்பணிக்கு வேண்டிய உதவிகளைத் திருப்பணிச்சபைமூலம் பத்தர்கள் புரிந்து கொள்ளலா மெனவும் கோயில் தர்மகர்த்தாவும், தேர்த் திருப்பணிச்சபைப் போஷகருமாகிய ஸ்ரீமான். வை. கந்தப்பச் செட்டியார் தெரிவிக்கின்றனர்,

## குருமகாசந்நிதானம் நல்லாசி வழங்கிக் கௌரவித்தார்கள்

சிதம்பரம், மார்கழி 8.

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் 25 வது ஸ்ரீலஸ்ரீ. கயிலை மகாசந்நிதானம் அவர்களை யாழ்ப்பாணம், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியரும், வில்லுப்பாட்டுடன் சமயப்பிரசங்கமும செய்து வருபவருமாகிய திரு, வி. கே. ஆறுமுகம் அவர்கள் 7-2-65 காலை தரிசனம செய்து நல்லாசி பெற்று, ஆதீன வெளியீட்டு நூல்கள் சிலவற்றையும் அன்பளிப்பாகப் பெற்றுள்ளார்கள்.

(எமது சிதம்பரம் நிருபர்)

## பாத யாத்திரை

சிவராத்திரியை முன்னிட்டு 1-3-65 திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு ஒரு பஜனைக்குழு, நல்லூர் முருகன் கோவிலிலிருந்து தனது பாதயாத்திரையைத் தொடங்கி பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, மணிக்கூட்டு வீதி, கன்னாதிட்டி வீதி வழியாக வண்ணை வைத்தீஸ்வரன்கோவிலை அடைந்து, அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாகக் கீரிமலையை அடைகிறது.

மேற்படி பாதயாத்திரையை ஒழுங்குபண்ணிய நல்லூர் பஜனைச் சபையின் தொண்டு பாராட்டற்குரியதே.

## சிவஞானபோதமும் சைவ மக்களும்

[சித்தாந்த சைவமாணவன்]

சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்தச் செந்நெறியின் முதல்நூல்கள் வேதங்களும் சிவாகமங்களுமாம். வேதங்கள் நான்கு: இருக்கு, யசுர், சாமம், அதர்வம். ஒவ்வொரு வேதமும் நான்கு உட்பிரிவுகளை உடையது: சம்ஹிதைகள், பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள். நான்கு சம்ஹிதைகளும், பெரும்பாலான பிராமணங்களும், உபநிடதங்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம், ஜேர்மனியம் முதலிய ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப்பற்றிய விபரம் இன்னொரு சந்தர்ப்பத்தில் கூறப்படும்.

வேதங்களுக்குப் பாடியம்போல் அமைந்திருப்பன ஆகமங்கள். சைவ ஆகமங்கள் 28 ஆகும். இருபத்தெட்டு ஆகமங்களிலும் உள்ள சுலோகங்களின் தொகை, ஒரு இலட்சத்து ஆயிரத்து நூறு கோடியே முந்நூற்றெழுபத்திரண்டு இலட்சமாகும. காமிக ஆகமத்தின் கிரந்தத்தொகை பரார்த்தம் [1,000,000,000,000,000]
சூட்சுமத்தின் சுலோகத்தொகை பதுமம். [1,000,000,000,000,000]
சகசிர ஆகமம் சங்க சுலோகமுடையது. [100,000,000,000,000]. இப்படியாகச் சைவாகமங்களின் பரப்பு அமைந்திருக்கிறது. இம்மட்டோ! இருபத்தெட்டு ஆகமங்களுக்கும் 207 உபாகமங்கள் உண்டு. இவைகள் சைவமக்களின் அரும்பெருஞ் சொத்துக்கள். ஆனல் இவைகளுட் பெரும்பாலானவைகள் அழிந்தொழிந்து போய்விட்டன. சில ஆகமங்களின் சில பகுதிகளும், ஒரு சில உபாகமங்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன, இவைகளைப்பற்றிய விபரமும் அடுத்த இதழ்களில் பேசப்படும. வேதங்களும் ஆகமங்களும் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன: கிரியாபாதம், ஞானபாதம் என்று ஒவ்வொரு பகுதியும் அழப்பரும் சமுத்திரமாய், பரந்து விரிந்து கிடக்கின்றது. சில வாழ்நாளும், பல பிணியும் சிற்றறிவும் உடைய நம்மால் படித்தறிய முடியாமல் பரந்து கிடக்கிறது கருணைக்கடலாகிய சிவபெருமான், நமபொருட்டு இரங்கித் திருவெண்ணை நல்லூரில் மெய்கண்டதேவ நாயனாராய் எழுந்தருளிச் சிவஞானபோதம் என்னும ஞான நூலை அருளிச் செய்தார், ஆகமங்களில் பரந்துகிடக்கும் ஞானபாதப் பொருளைத் தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்து உய்யுமாறு அருளிச் செய்யப்பட்டது, சிவஞானபோதம்.

சிவஞானபோதம் வைதீக சைவத்தின் முதல் நூலன்று; முதன்மையான நூல். இதனை அருளிச்செய்த மெய்கண்டதேவ நாயனார், இளம் பராயத்திலேயே சிவஞானம் கைவரப் பெற்றவர், "சிவானந்தப் பெரும்பேறு பெற்ற சீவன்முத்தர் சிவமேயாவர்"

கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்—வெண்ணெய் நல்லூர்
மெய்கண்டான் என்றேருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்துக் கண்.

"நெற்றியில் திருநயனமும் நீலகண்டமும் முதலியவற்றை மறைத்துத் தரையிடத்து அருள, மாந்தரை யிருள் நீக்கும்படி, மானிட யாக்கையால் வந்தவன் திருவெண்ணை நல்லூரிலே வாழும் மெய்கண்டதேவனாதலால், அவனை ஒருகாற்சென்று பொருந்துவாராயின், உயிருக்குயிராயிருக்கிற சிவனைத் தங்களிடத்திலே புலப்படக்கண்டவர்கள் என்பதாம்." இருபா இருபஃது.

இச்சிவஞானபோதம், பொது, சிறப்பு என்னும் இரண்டு அதிகாரங்களையும், பிரமாணவியல், இலக்கணவியல் சாதனவியல் பயனியல் என்னும் நான்கு இயலகளையும், பன்னிரண்டு சூத்திரங்களையும, முப்பத்தொன்பது அதிகாரங்களையும், எண்பத்தொரு உதாரண வெண்பாக்களையும், மங்கல வாழ்த்து, அவையடக்கம் என்னும் இரண்டு செய்யுட்களையும உடையது.

சிவஞானபோதத்திற்குப் பல உரைகள் உண்டு. ஒன்று பழையவுரை. இப்பழைய உரையிலிருந்து வேறுபட்ட பல உரைகள் இருந்தன என்பது அறியக்கிடக்கிறது, பழைய வுரையை இயற்றியவர் பெயர் அறியமுடியவல்லை. திருக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

குரோதி ஞூ மாசி மீ
௳வ வெள்ளிக்கிழமை


## பாலர் கல்வி

கற்றல் ஒருவனுடைய தொட்டில் பருவந் தோடக்கம் சுடுகாடு அடையும் வரைக்கும் நிகழ்வதென்பது கல்விநிபுணர் கருத்தாகும், இக் கருத்தை 'நூறுண்டுவரையிலும் ஏடு கை விடேல்' என்ற முதுமொழியும் ஆதரிக்கின்றது. ஆகையினுல் ஒருவனுடைய கல்வி சிறுபிராயத்திலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். 'இளமையிற் கல்வி சிலையிலெழுத்து' என்ற வாக்கியத்தின் வண்ணம் கல்விஇளமையிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். இளமையில் பயிலுங் கல்வி சிலையின்கண்ணுள்ள எழுத்துப்போல ஒருவனுடைய மனத்தில் நன்ருகப் பதிந்திருக்கும். மறதியென்னும் கள்வனுல் இளமையில் கற்ற பாடங்கள் கவரப்படமாட்டா.

அதிவண. இக் நேஷஸ் லோயலா என்னும் மேலைத் தேச கிறீஸ்துவ ஞானி இளமைக் கல்வியைப்பற்றிச் சொல்லிய கூற்றை இச் சந்தர்ப்பத்தில் நோக்குவோமாக.

அவர் கூறுவதாவது:

**"ஒரு குழந்தையை ஏழு வயது பூர்த்தியாகும் வரை என்னிடம் ஒப்படையுங்கள்; பின் அக்குழந்தையை எஞ்சியகாலம் முழுவதும் நீங்கள் வைத்திருக்கலாம்".**

அவருடைய கருத்து யாதெனில் ஒரு வயது தோடக்கம் ஏழு வயதுவரையும் உள்ள காலம்தான் மனிதனுடைய வாழ்க்கையின் பிரதானமான பருவம். அவனுடைய நல்லொழுக்கத்துக்கு அத்திபாரமிடும் பருவம் அக்காலமேயாகும்,

எங்கள் அரசாங்கம் பிரசுரஞ் செய்த வெள்ளையறிக்கைத்திட்டத்தின்படி இப்போழுது குழந்தைகளை ஐந்து வயது பூர்த்தியானபின்புதான் பள்ளிக்கூடங்களில் சேர்த்துக்கோள்ள முடியும். இத் திட்டம் ஐந்துவயது பூர்த்தியாகாத பாலர்களின் கல்வியைப் புறக்கணித்துவிட்டது. அத்தகைய குழந்தைகள் பெற்ருரின் பாதுகாவலில் வளர வேண்டுமென்பதே வெள்ளையறிக்கையின் தீர்மானம். நமது நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து வீதமான பெற்ருர்தானும் ஐந்து வயதைப் பூர்த்தி செய்யாதபிள்ளைகளுக்குத தங்கள் வீடுகளில் நற்பழக்கமும் கல்வியும் கற்பிக்கும் நிலைமையிலிருக்கவில்லையென்பதை எவருமறிவர், பிள்ளைகளின் கல்வியை அரசாங்கமே பொறுப்பேற்றுவிட்டது. அங்ஙனமிருக்க ஐந்து வயதுப் பராயம் அடையாத குழந்தைகளின் கல்வியை அரசாங்கம் அலட்சியம் செய்வது பிள்ளைகளின் கல்வியபிவிருத்திக்குப் பெரிதும் பங்கத்தை உண்டுபண்ணுமல்லவா! இக் குறையை யுணர்ந்து நமது நாட்டிலுள்ள கல்விநிபுணாகளும் பொதுமக்கள் எல்லோரும் ஐந்து வயது நிரம்பாத பாலர்களையும் பள்ளிக்கூடங்களில் சேர்க்க ஒழுங்குசெய்யும்படி அரசாங்கத்துக்குவிண்ணப்பித்தார்கள். அரசாங்கம் ஒருவாறு அவர்களுடைய விண்ணபபத்துக்கிணங்கி பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களிற் சேர்க்கும் விதியில் இப்போழுது மாற்றஞ் செய்திருக்கின்றது,


இவ்வருடம் மே மாதம் முதலாம் திகதி நான்கு வருடங்களைப் பூர்த்தி செய்து ஐந்தாவது வயதை அடையும் குழந்தைகளை இனிமேல் பாடசாலைகளில் முதல் பிரிவில் சேர்ததுக் கொள்ளலாம். சென்ற ஜனவரி 6-ந் திகதி ஐந்து வயதையடைந்தகுழந்தைகளையே பாடசாலைகளில் சேர்த்துக்கோள்ளலாம் என்று முன்னர் தெரிவித்த விதியை மாற்றிக் கல்விஇலாகா ஒரு சுற்றுநிருபத்தை எல்லாப் பாடசாலைத் தலைமையாசிரியர்களுக்கும் அண்மையில்அனுப்பியிருக்கின்றது. 6—1—65 ககு முன்னர் ஐந்துவயதைப் பூர்த்தி செய்த குழந்தைகளை முதலில சேர்த்துக்கோண்டு மிகுதியாயுள்ள இடங்களுக்கு 6—1—65க்குப் பிறகு ஐந்து வயதை அடைந்த குழந்தைகளைச்சேர்த்துக்கோள்ள வேண்டும. இப்படிச் சேர்த்த பின்னரும் இடமிருக்குமாஞல் 1—5—65 ல் ஐந்து வயதைப் பூர்த்திசெய்யும் குழந்தைகளைச் சேர்த்துக் கோள்ள வேண்டும் எனத் தலைமையாசிரியர்களுக்கும் சுற்றுநிருப மனுப்பப்பட்டிருக்கின்றது. இவ்விதமாக அரசாங்கம ஐந்துவயதைப் பூர்த்தி செய்யாதபிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களில் சேர்க்க ஒழுங்கு செய்தமை நாட்டின் பாலர்கல்விக்குப் பெரும் நன்மையையுண்டாக்கும். அரசாங்கத்தினுடைய இச்செயல் பாராட்டற்குரியது,

— —

# தெய்வப் பணிகளைச் செய்வோம் வாரீர்!

## தேர்க் கோட்டகைத் திருப்பணிக்கு 2001 ரூபா வழங்கினுர்

"நமது முன்னேர்கள் பக்தியோடு ஆக்கிவைத்த ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டியது எமது கடனுகும், அவ்வாறு நாம் செய்யாவிட்டால் இப்பிறவி எடுத்ததில் ஒரு பிரயோசனமும் இருக்காது"



இவ்வாறு உரும்பராய் கருணுகரப் பிள்ளையார் கோவில் தேர்க் கொட்டகைத் திருப்பணி நிதிக்காக உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற கலை விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பிரபல சமூக சேவையாளரும், கண்டி மராமத்து இலாகா ஓவசியருமான திரு, வே. த. செல்வத்துரை அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பிரபல நியாயவாதியும், சைவ பரிபாலன சபைக் காரியதரிசியும், உரும்பராய் கருணுகரப் பிள்ளையார்கோவில் திருப்பணிச் சபைத் தலைவருமான திரு. ஆ. தனபாலசிங்கம அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில அநுராதபுரம் வித்தியாகந்தோர் கணக்காளர் திரு. மு. பசுபதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திஞர்கள். திரு. செல்வத்துரை அவர்களையும் பாரியாரையும் மலர்மாலையிட்டும் பூச்செண்டு வழங்கியும் வரவேற்ருர் ஆசிரியர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள்.

பிரதம விருந்தினரான திரு. செல்வத்துரை அவர்கள் தொடர்ந்து பேசுகையில் 'கருணுகரப் பெருமான் ஆலயம் மிகப் பழமையும் சிறப்பும் வாய்ந்தது. இந்த ஆலயத் தேர்க்கொட்டகைத் திருப்பணி நிறைவேற நடைபெறும் இக்கலை விழாவை ஆரம்பித்து வைப்பதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன்' என்று கூறிக் குத்து விளக்கேற்றித் திறந்து வைத்துப் பேசினர். திருமதி. செல்வத்துரை முத்தம்மா அவர்கள்மூலம் ரூபா 2001 திருப்பணி நிறைவேற நன்கொடை வழங்கினுர்.

நாதஸ்வர வித்துவான் ஆ. அங்கப்பாவின் நாதஸ்வரக் கச்சேரியும், திருமதி. தையல் சுந்தரம் பரந்தாமனின் இன்னிசை விருந்தும், கொக்குவில் கலா பவனம் அதிபர் நடனகலாநிதி திரு. ஏ. சுப்பையா அவர்கள் தயாரித்து அளித்த "குறிஞ்சிக் குமரன்" என்னும் நாட்டிய நாடகமும், இலங்கை வானெலி நாடகத் துறைத் தலைவர் திரு சண்முகநாதனின் (சாணு) அரிய தயாரிப்பான "மத்தாப்பு" என்னும் நகைச்சுவை நாடகமும் நடைபெற்றது திரு. ராஜ் அவர்கள் சகிகடத்தார் வேடத்தில் தோன்றி மகிழ்வித்தார். ஈற்றில் திருப்பணிச் சபைச் செயலாளரில் ஒருவரான திரு. அ. பஞ்சாட்சரம ஆசிரியர் நன்றியுரை வழங்கிஞர்கள். — — (நந)

## திருவிழா

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் 16-ம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 15 நாட்களுக்குத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. சிவராத்திரியன்று இன்னிசைக் கச்சேரியும், இன்னும்பல சிறப்பான நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. தீர்த்தத்துடன் திருவிழா முடிவடைகிறது. — —

## ஸ்ரீ நாகபூஷணியம்மை தேவஸ்தானத்தில் மாசி மகம்

16-2-65 செவ்வாய்க்கிழமையன்று அராலி மேற்கு ஸ்ரீ நாகபூஷணியம்பாளுக்கு விசேட சங்காபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மங்கள வாத்தியக் கச்சேரியும், திருமுறை ஓதலும், பக்கவாத்திய சகிதம் பக்திப் பாடல்கள் பாடுதலும் நடைபெற்றன. பல அடியார்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அம்பாளைத் தரிசனம் செய்து அநுக்கிரகத்தைப் பெற்ருர்கள். — —

## சிவஞான போதமும் சைவமக்களும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் இதை அச்சிட்டு உபகரித்திருக்கிறது. மற்ருென்று சிந்தனையுரை. இதனை இயற்றியவர் மேற்படி ஆதனத்தைச் சேர்ந்த ஸ்ரீ. அம்பலவாணதேசிகமூர்த்திகள். இன்னென்று, பாண்டிப் பெருமாள் விருத்தி, இவ்வுரையும் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது.

இப்பொழுது. சித்தாந்த சைவ மக்களால் பெரும்பாலும் பயிலப்பட்டுவரும உரைகள் திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞானயோகிகளால் ஆளிச் செய்யப்பட்டன. சிவஞானயோகிகள் இரண்டு உரைகள் செய்திருக்கிருர்கள்; ஒன்று சிற்றுரை, மற்றது பேருரை - மாபாடியம். இவைகளைத்தவிர, சிவஞானபோதம் தெளிபொருள் விளக்கம் என்று ஒன்று உண்டு எனவே, சிவஞானபோதத்திற்கு ஆறு உரைகள் உண்டு. அவையாவன:-

1. பழையவுரை, 2 சிந்தனையுரை, 3. பாண்டிப் பெருமாள் விருத்தி, 4. சிற்றுரை, 5. பாடியம், 6. சிவஞானபோதத் தெளிபொருள் விளக்கம்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக் குருமஹா சந்நிதானமாய் இப்பொழுது, எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகளின் பெருங் கருணையினுல் சிவஞானபோதத்திற்கு எழுதப்பட்ட ஆறு உரைகளும் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன. இன்னும, குருமூர்த்தத்தின் பேரருளால், மற்றப் பதின்மூன்று சித்தாந்த சாத்திரங்களும விளக்க உரைகளுடன் அச்சிடப்பட்டு, விலையின்றி வழங்கப்பட்டன. தேசிகசுவாமிகளின் இவ்வள்ளன்மைக்குச் சித்தாந்த சைவ உலகம் என்றென்றும் கடப்பாடுடையது.

ஸ்ரீமத். சிவஞான யோகிகள் இயற்றிய சிற்றுரை, பேருரையை நோக்க, மிகச் சுருக்கமாக அமைந்திருக்கிறது· கருவி நூல் அறிவுபெற்றவர்களுக்கன்றி, மற்றவர்களுக்குப் படிப்பதற்கு மிகவும கடினமானது. குருமுகமாகப் பாடங் கேட்டாலன்றித் தன் முயற்சியால் படித்துணர்வது வெகு கஷ்டம். இதனைப் பாடஞ்சொல்லககூடிய ஆசிரியர் தொகையும் மிகவும் அருகிவிட்டது:

இந்தச் சூழ்நிலையில் சைவமக்கள் செய்த புண்ணியத்தின் பயனுல் தூத்துக்குடிச் சைவப்பெரியார் ஸ்ரீமத். பொ. முத்தையாபிள்ளை அவர்கள் மனத்தில் ஒரு சிறந்த எண்ணம் உற்பத்தியானது; ஸ்ரீமத். சிவஞானயோகிகள் செய்தருளிய சிற்றுரைக்கு ஒரு விளக்கம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீமத். பொ முத்தையாபிள்ளை அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்துச் சைவப்பிரசாரகர் இறைவன் திருவருளால் சிற்றுரை விளக்கம் 1918-ம் ஆண்டு அச்சிடப்பட்டு வெளிவந்தது. அப்பொழுது அதன் விலை மூன்றரை ரூபா; இப்பொழுது முப்பது ரூபாவுக்கும் பெற்றுக்கொள்ள முடியாது.

இச் சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் என்னும் நூலை அச்சிடப் பொருள் உதவியவர் "பாண்டிவளநாட்டிலே தேவலோகத்திலுஞ் சிறந்து விளங்கும் தேவகோட்டையின்கண், வைசியகுலத்தில், சிவபத்தி அடியார்பத்திகளிலும், கல்விச் செல்வம் பொருட் செல்வங்களிலுஞ் சிறந்து, இன்சொல்லும் மலர்ந்த வதனமும், எளியார் வலியார் எவருக்கும் எப்பொழுதும் தடையில்லாத செவ்வியும் உடையராய்" வாழ்ந்த ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார் அவர்கள்.

ஸ்ரீமத். பொ. முத்தையாபிள்ளை அவர்கள் ஆரியம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் புலமை படைததவர்; சைவ சித்தாந்த ஞானம் நிரம்பியவர். அவர் இயற்றிய சிற்றுரை விளக்கததைக் கற்றவர்களுக்கு இது புலனுகும். இருந்தும், தாம் இயற்றிய சிற்றுரை விளக்கத்தை அச்சிட்டு வெளியிடுமுன், அதனைப் பரிசோதனை செய்வித்து வெளியிட வேண்டுமென்று கருதினுர். அவர் கூறுவதாவது; "அதனைப் பரிசோதனை செய்து அச்சிடவேண்டுமென்றெண்ணினேன். பரிசோதனை செய்பவர் மேலே உரையாசிரியருக்குக் கூறிய இலக்கணம் முற்றும் நிரம்பியவராய் இருத்தல் வேண்டும், இன்றேல் முறறும் பரிசோதித்தல் கூடாது இதனையுன்னிப் பலநாள் வருந்தினேன். பின்னர், முதலாவதாக என்னேடு அளவளாவி இலக்கண விஷயத்தில் மட்டும் பலபாகங்களைப் பரிசோதித்தவர்கள், என்னுடைய ஆப்தரும், தமிழ்க்கல்வியிலேயே தம்முடைய வாழ்நாளை அவகாசம் கிடைத்தபோதெல்லாம உபயோகப்படுத்துகின்றவர்களுமாகிய வக்கீல் ஸ்ரீமான். சோமசுந்தரபாரதியவர்களே. அதன் பின்னர், இதனை அச்சிடுங்காலததில், இலக்கண முதலிய எல்லா விஷயங்களையும ஒருங்கே நன்குணர்ந்தவர்களும, சிவபெருமான திருவடியில் இடையருது கசிந்த சிந்தையை உடைய சிவனடியாரும், திராவிட மாபாடியத்தைச் செப்பமாக அச்சிட்டு உதவினவர்களும், கனவிலும் பிறர் கேடு எண்ணுத பரிசுத்த மனமுடையவர்களுமாகிய ஸ்ரீமத். சுவாமிநாத பண்டிதரவர்கள், இரவும் பகலும் என்னுடன் அளவளாவி எல்லா விஷயங்களையும் பரிசோதனை செய்து உதவினுர்கள். நாங்கள் இருவரும் எவ்வாறு ஆராயினும் சொறபிழை பொருட்பிழை நேரக்கூடுமெனவெண்ணி, இன்னுமொருவர் பரிசோதித்தல் நலமாகுமென்றெண்ணினேன். என் கருத்துக்கிணங்கிச் சைவசமய பரிபாலனத்துக்கென்றே தோன்றிச் சிததாந்த சைவ சீலராய் வாழும் சிததாந்த சரபம், அஷ்டாவதானம் சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திர சுவாமிகள், ஒவ்வொரு பாரததையும் நன்கு பரிசோதித்து உதவினுர்கள்."

[ஸ்ரீமத். சுவாமிநாத பண்டிதர் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்கள் கல்விப்பரம்பரையில் வந்தவர்,

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் அருளிச்செய்த

# சிவப்பிரகாசம்

(முற்றொடர் 4)

## சிவஞான போதம் சிவஞானசித்தியார் என்னும் நூல்களின் சூத்திர அமைப்பு இந்நூலில் வருமாறு

இங்ஙனம் கூறிவந்த வகையில் முன்னுள்ள சிவ ஞான போதத்தின் பொருளும் சிவஞான சித்தியாரின் பொருளும் இந்தச் சிவப்பிரகாச வழிநூலின் பொருளுங் கூடினதேயாதலால் அந்நூல்களைப்போலச் சூத்திரம் பன்னிரண்டும் இந்நூலில் நின்ற முறைமை எங்ஙனம் என்னில் அவை வருமாறு:-

"ஒங்கொளியாய்" என்ற விருத்தந் தொடங்கி "தொன்மையவாம" என்னும் விருத்தம் முடிவாகிய செய்யுள் பன்னிரண்டும் பாயிரமாக வகுத்தருளிச் செய்து,

மேற் பதியிலக்கணமாகிய "பலகலை" என்ற விருத்தந் தொடங்கி 'எற்றவிவை" என்ற விருத்தமுடிவாகிய செய்யுளாறும் முதற் சூத்திரமாகவும்,

பசுவிலக்கணமாகிய 'எண்ணரிதாய்' என்ற விருத்தந்தொடங்கி 'அரிவையரின் புறமுத்தி' என்ற விருத்த முடிவாகிய செய்யுள் முப்பத்திரண்டும் இரண்டாஞ் சூத்திரமாகவும் ஆகப் பொது ஐம்பதும் இங்ஙனம் வகுத்து,

மேல், உண்மை ஐம்பதில் 'இங்கிவை' என்ற விருத்தம் ஒன்றும் இந்த உண்மைக்கு அதிகார வகுப்பாகவும்,

மேல், ஆன்ம இலக்கணமாகிய 'செறிந்திடும்' என்ற விருத்தந் தொடங்கி "ஓரிடத்திருத்தல்" என்ற விருத்த முடிவாகிய செய்யுள் எட்டும் மூன்றாஞ் சூத்திரமாகவும்,

அவத்தைத் தன்மையாகிய 'எண்ணவொன்றிலாத தீதம்', 'இவ்வகையவத்தை', 'நீக்கமில தீதம்' என்னும் செய்யுள் மூன்றும நாலாஞ் சூத்திரமாகவும்,

உணர்த்து முறைமையாகிய 'மருவிய பொறியில்' என்ற விருத்தந் தொடங்கி 'அறிந்திடு மனுதி' என்ற விருத்த முடிவாகிய செய்யுள் ஐந்தும் ஐந்தாஞ் சூத்திரமாகவும்,

ஞானவாய்மையாகிய 'காட்டிடுங் கரணம்' 'பன்னிறங் கவரு', 'மாயை மாமாயை' என்னும் விருத்த மூன்றினுள் 'காட்டிடுங் கரணம்' ஒன்றும் ஆறாஞ் சூத்திரமாகவும்,

நின்ற விருத்தமிரண்டும் மேலதற்கோர் புறநடையாகிய ஏழாஞ் சூத்திரமாகவும்,

மேல், அதன் பயன் என்னும் அதிகாரத்தினுள் 'தேசுற மருவும்' என்ற விருத்தந் தொடங்கி 'எல்லையில்லையில் பிறவி என்ற விருத்தமுடிவாகிய செய்யுள் பத்தொன்பதும் 'புனிதனுமம்' என்னும் அதிகாரமாகிய 'பந்தமானவை', 'திருவெழுத்து 'ஆசுறு' என்னும் விருத்த மூன்றும் ஆக முன்னுங்கூட்டிச் செய்யுள் இருபத்திரண்டினுள் 'தேசுற மருவும்' என்ற விருத்தமொன்றும் இவையிற்றுக்கு அதிகார வகுப்பாகவும்,

ஆன்ம தரிசனமாகிய 'தன்னறிவதனல்' என்ற விருத்தந்தொடங்கிச் "சுத்தமாஞ் சத்தி" என்ற விருத்த முடிவாகச் செய்யள் நான்கும் எட்டாஞ் சூத்திரமாகவும்,

ஆன்மசுத்தியாகிய 'புகலருமசத்தர் தம்பால்' என்ற விருத்தந் தொடங்கி 'அடைபவர் சிவமேயாகும்' என்ற விருத்தமுடிவாகிய செய்யுள் நான்கும் பஞ்சாக்கர தரிசனத்தில் விருத்த மூன்றும் ஆக முன்னுங் கூட்டிச் செய்யுள் ஏழும ஒன்பதாஞ் சூத்திரமாகவும்,

ஆன்ம லாபமாகிய 'பொற்புறு கருவி' யென்ற விருத்தந் தொடங்கி "எல்லையில் பிறவி" என்ற விருத்த முடிவாகிய செய்யுள் பத்தும் பத்தாஞ் சூக்திரமாகவும்,

மேல் அணைந்தோர் தன்மையாகிய 'தீங்குறுமாயை' என்ற விருத்தந்தொடங்கித் 'தொண்டர்களிடம' என்ற விருத்த முடிவாகச் செய்யுள் ஆறினுள் 'தீங்குறு', 'குறிபபிடம', 'அகம்புறம்', 'அண்டம்', 'மண்முதல' என்னும் விருத்தம் ஐந்தும பதினொன்றாஞ் சூத்திரமாகவும், 'தொணடாகளிடம்' என்ற விருத்தம் ஒன்றும பன்னிரண்டாஞ் சூத்திரமாகவும் நின்றதென அறிக.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## இலக்ஷார்ச்சனையும் மகாயாகமும்

கொழும்பு தட்டாதெருவில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவசுப்பிரமணியப் பெருமானுக்கு 17-2-65புதன் கிழமை தொடக்கம் 25-2-65 திங்கட்கிழமைவரை லக்ஷார்ச்சனை, லட்சஹோமங்கள் நடைபெறவிருப்பதாகவும், இதற்கு அடியார்கள் பால், தயிர் இன்னும் பல பொருட்களாக உதவி செய்ய வேண்டுமெனவும், இக்காலங்களில் விரதமிருக்கும் அடியார்களுக்கு வேண்டிய உதவிகள் செய்யப்படுமெனவும் மேற்படி கோவில் முகாமையாளர்களால் ஒரு வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது.

## சந்தானசாரியர் புராணம் வெளியீடு

சிதம்பரம், மார்கழி 8.

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் 25-வது ஸ்ரீலஸ்ரீ. கயிலை மகாசந்நிதானம் அவர்கள் நேற்று ஆதீனத்தின் 2-வது குரு மூர்த்திகளான ஸ்ரீலஸ்ரீ. ஆனந்தபரவசரின் குருபூசை விழாவைச் சிறந்த முறையில் நடத்தி வைத்தார்கள்.

பகலில் மாகேசுரபூசையையும், அன்னம்பாலிப்பையும் நடத்தி வைத்தார்கள். காலையும், மாலையும் சாத்திர சொற்பொழிவுகள் நடைபெற்றன.

ஸ்ரீலஸ்ரீ. கயிலை மகாசந்நிதானம் அவர்கள் 'சந்தானசாரியர் புராணம்" என்ற நூலை அச்சிட்டு குருபூசையின் நினைவாக ஆதீனத்தின் 561-வது வெளியீடாக வெளியீடு செய்தார்கள்.

(எமது சிதம்பரம் நிருபர்)

## சிவஞான போதமும் சைவ மக்களும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண நகரில் உள்ள கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.]

மேலே காட்டப்பட்ட பந்தி, ஸ்ரீமத். பொ. முத்தையா பிள்ளை அவர்கள் சிவஞானபோதச் சிற்றுரை விளக்கத்திற்கு எழுதிய முகவுரையிலிருந்து அநுவதிக்கப்பட்டது. அப்பந்தி ஸ்ரீமத். முத்தையாபிள்ளையின் அடக்கம், பணிவு, எளிமை முதலிய மனிதப் பண்பாடுகளையும் நூலின் பெருமை, சிறப்பு, மரபுவழுவாமை முதலிய பேர் இயல்புகளையும் துலக்கி நிற்கிறது

—தொடரும்.

## குரோதியே! நின் கொடுமையைக் கைவிடு

உலகம் காலதத்துவத்துட்பட்டு நடைபெறுகின்றது ஆண்டுகள் பல. சிலவற்றில் தேவ கோபம் தோன்றும். கொடுமையை மக்கள் விட்டால் என்றும் இன்பமே! சமய வரம்பை உடைத்து விடக்கூடாது. பஞ்சபூத வடிவமும் இறைவரே! இவ்வாண்டு குரோதி என்றவுடன் அஞ்ச வேண்டுமல்லவா? எட்டுக்கிரகங்கள் ஒரே இராசியில் வந்தன. என்ன அன்பு எவ்வளவு வழிபாடு. தண்ணீர்படாத சுவாமிகளுக்கு நல்ல யோகம். போகட்டும் உலகியல் நன்றாக நடைபெறுவது கற்றோராலே என்பர். உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே என்றார் முன்னோர். நிற்க,

இக்குரோதி கடைபோகு முன் கைவரிசையைக் காட்டி விடும்போலிருக்கின்றது. வாயுதேவனின் சீற்றம் ஒருபுறம் நெருக்கிவிட்டது. சில செல்வப்பிரபுக்கள் மடிந்தனர். சமயமும் தமிழும் உணர்ந்து பழுத்த பேரறிவுப்

பண்டிதர் பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவரஐயர்

பொற்கலங்களும் களவாடப்பட்டன. "தஸ்கரானும் பதயே" என்று ஓரிடத்து வருகின்றது. தஸ்கரம=களவு. யமன்தான் ஒருவரும் அறியாதவாறு களவு செய்ய வல்லவன். தரியான் ஒரு கணம் என்று நாம் சிந்திப்பதில்லை. கற்றார் துணையாகி நிலவிய திருவாளர் சு. நடேச பிள்ளையவர்களை இழந்து மனம் புண்பட்டது; அது ஆறுமுன் வேறு ஒரு பெரியாரும் மறைந்தார். அப்பெரியார் சென்னைவாசி, யாழ்ப்பாணத்துச் சைவசமயி என்றுதான் அவரைக் கூறவேண்டும. அவர் சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை என்ற பேருடையவரே. யாழ்பபாணத்துக் கற்றோர்க்குக் கண்ணனவர் அமெரிக்க புத்தக வெளியீடுகளின் தலைவர் அவர். கற்றார் புகழ் பரப்பிய கல்வி நிலையமாகவும், கற்றார் வறுமைகளையும் களஞ்சியமாகவும் ஜம்புலிங்கம்பிள்ளை விளங்கினர் 1918-ம் ஆண்டு முதல எனக்கும ஒரு பெரிய உதவியாளராக அவர் விளங்கினர். திரு. இராஜகோபால பிள்ளை அவர்களும ஜம்புலிங்கம்பிள்ளையவர்களும் "சைவப்பிரசாரகர் இரத்தினேஸ்வர ஐயர்" என்று திருச்சியிலும, சென்னையிலும் பிரபலப் படுத்தியதைக் கூறாதிருக்க முடியாது, பர்மாநாடு சுகமென்று நான் சென்று பின் யுத்தகாலத்தில் துக்கத்துடன் திரும்பியபின்னர் உடனே என்னைத் தங்கள் நகருக்கு வரவழைத்து பொன்னும் பூந்துகிலும் நல்கி என்

மொழி நவின்ற கற்பகத்தை என்று காண்பேன். சைவ திருவும், செந்தமிழில் சிறந்த நூல் வளங்காட்டும் பண்புமுடைய பிள்ளையவர்களின் ஆன்மா சிற்சபேசன் செந்தாமரை மாணடிக்கீழ் இன்புறப் போற்றுகின்றேன்.

"சைவமுந் தமிழுந் தழைத்து மிளிர்க."

### பிழைதிருத்தம்

5-2-65 இந்துசாதனத்தில் 'ஆசிரியர்கள் தேவாரப்பண் பயில்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்' என்ற தலையங்கத்தின் கீழ் வெளி வந்த செய்தியில் முதற்பந்தியில் 'வண்ணார்பண்ணையில் வசித்த சங்கீத விற்பன்னர் சோமுவிடம்' என்பதை வண்ணார்பண்ணையில்வசித்த சங்கீத விற்பன்னர் புத்துவாட்டி நாகலிங்கம் சோமசுந்தரம் அவர்களிடம் எனத் திருத்தி வாசிக்கவும். தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம். ஆ—ர்.


### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திரிக கோட்டில்

காலம் சென்ற தங்கோடை காரைநகர் முருகேசு கதிரவேல் பெண் புவனேஸ்வரியின் ஆதனங்களின் தத்துவம் - இறந்தவர் தத்துவ வழக்கு, இல. 1412 T. தங்கோடை, காரைநகர் முருகேசு கதிரவேல்

—தத்துவகாரன்

எதிராக

மயினர்,

1. ஷியூர் முருகேசு கதிரவேல மகள் நாகேஸ்வரி
2. ஷியூர் கந்தர் சங்கரப்பிள்ளை 1-ம் உத்தரவாதி பவிய மற்றவர் அவரின் பாராபரிப்புக்காரர் 2-ம் உத்தரவாதி

—உத்தரவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டின் 1412. T. இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நகைகள் என்னால் 1965-ம் ஆண்டு பங்குனி மாசம் 27-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டிலிருந்து யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டுச் சக்கிடுத்தார் முகதாவில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

நகைகளின் விபரம்:

1. தாலியும் கொடியும் 8 பவுண் ½ மஞ்சாடி குறைய
2. மூன்று சோடிக காப்புகள 5 3/4 பவுண்
3. ஒரு அட்டியல், 3 1/8 பவுண்
4. ஒரு பவுண சங்கிலி 3 5/8 பவுண்
5. ஒரு பவுண் பெண்டனும். சங்கிலியும், 7 பவுண
6. ஒரு புரூச் 1 பவுண், 1 மஞ்சாடி குறைய
7. ஒரு மோதிரம் ½ பவுண், 1 மஞ்சாடி குறைய
8. ஒரு சோடி தோடு, ½ பவுண்
9. ஒரு மூக்குத்தி, ⅛ பவுண், ½ மஞ்சாடி குறைய

1965ம்ஞு மாசிமீ 17-ம்உ
காரைநகர்,

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

M 275 19-2-65.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை
கதிரவேலு முருகேசு கைம்பெண் முத்துப்பிள்ளை

—வழக்காளி

இல. M.B. 5443

எதிராக

வட்டுக்கோட்டை

1. வில்லியம் யோசேப்புவும் பெண்
2. செல்லம்மா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5443-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி 1965-ம் ஞு சித்திரை மீ 3 உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 2658-50-ம், 21-2-63 தொடக்கம் 27-6-63 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 10%வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 233 - 10. இதில் ரூபா 625 குறைக்கப்பட்டது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வட்டுக்கோட்டை மேற்கு கோயில்பற்று, வலிகாமம் மேற்கு இறை 'கலசம்புடையும் நச்சாண்டி" என்னும் காணி நிலப்பரப்பு 1-ம் 8 குளி- இதில் கல்வீடும் செய்பயிர் வான்பயிரும். எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு கனகசபை பெண் நல்லம்மா, மேற்கு கணபதிப்பிள்ளை ஆறுமுகமும பெண் லூசி, தெற்கு பாவிலு செல்லையாவும் பெண் சாந்திராணி, இது அடங்கலும் மேற்குப்பக்கத்து எல்லையில் கிணற்றில் பங்கும் உண்டு.

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
நம்-35 கொழும்புத்துறைவீதி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

M 271 19-2-65

### கோட்டு விறபனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

M.B. 5951

மண்டைதீவு

1. செபஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளையும் மனைவி
2. லீனம்மாவும்

—வழக்காளிகள்

எதிராக

மண்டைதீவு
கந்தவனம் கைலாசபிள்ளை

—எதிராளி

இவ்வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டு உத்தரவின்படி கீழ்க காணும் ஆதனம் 1965 ஞு மார்ச்சுமீ 20உ (20 - 3 - 65) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 596-16 சதமும் மேலும் 19-8-63தொடக்கம 10-3-64வரைக்கும் ரூபா 500/ வருடமொன்றுக்கு 10% வீத வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 151-70 சதமும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டிக் கோயிற்பற்று மண்டைதீவு இறை "செம்பாடு" நிலப்பரப்பு மூன்றரை, கிணற்றுப் பங்கும். இதற்கு எல்லை கிழக்கு குமாரப்பெருமாள் மனைவி தெய்வானையின் உரிமைககாரர்களினுதனம், வடக்கு சோமசுந்தரம் மனைவி தங்கம்மாவின் உரிமைக்காரர்களினுதனமும் ஒழுங்கையும், மேற்கு சுப்பிரமணியம் கைம்பெண் தில்லைநாயகியினுதனம், தெற்கு நாகலிங்கம் கனகரெத்தினததினுதனம். இது முழுவதிலும் சரியலாய் அரைவாசிப்பங்கு,

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்,

"இராசகிரி"
543. காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம். 5-2-65.

M. 273 19-2-65.

# திருக்கேதீச்சர சுவாமிகோயில் திருப்பணி நிதிச்சபை (யாழ்ப்பாணக் குழு)

திருக்கேதீச்சர சுவாமி கோவிற் (மூலஸ்தானம்) திருப்பணி வேலையை நிறைவேற்றும் பொறுப்பை யாழ்ப்பாணச் சைவமக்கள் ஏற்று அதற்கு வேண்டிய இரண்டிலட்சம் ரூபாவைச் சேர்ப்பதற்கு ஒவ்வோர் காரியாதிகாரியின் கிராமங்களிலும் உபகுழுக்களை நியமித்து, ஆங்காங்கு பிரசாரக் கூட்டங்களும்நடாத்தி, சைவஅடியார்கள் சேர்ந்து திருக்கேதீச்சரப் பதிகங்களைப் பாடிப் பஜனை செய்து கொண்டு வீடுதோறும் சென்று நிதி திரட்டி வருகின்றனர்.

இதுவரையில் மல்லாகம், தெல்லிப்பளை, சாவகச்சேரி, ஏழாலை தெற்கு, மாணிப்பாய், நெல்லியடி, வட்டுக்கோட்டை, கோப்பாய், அச்சுவேலி, சுன்னாகம், நீர்வேலி, பருத்தித்துறை, பயிலிட்டி, யாழ்ப்பாணம், புங்குடுதீவு, வியாபாரிமூலை, முதலிய இடங்களில் பிரசாரக்கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்கள் பலவற்றிலும் பிரம்மஸ்ரீ சீ. எஸ் எஸ். மணிபாகவதர் அவர்களின் கதாப்பிரசங்கமும். "அளவையூர்சஞ்சீவி" சி. விஞசித்தம்பி அவர்களின் கதாப்பிரசங்கமும்நடைபெற்றன. இவர்கள் இதை ஓர்பெருஞ்சைவத் தொண்டாகக்கருதி இலவசமாகவே செய்தனர். இக்கூட்டங்களிலும் சில பஜனைகளிலும், சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களும் கலந்துகொண்டார்கள். இதுவரை சேர்ந்த நிதி ரூ, 43,762-54. அவற்றின் விபரம் பின்வருமாறு:-

திரு. A. தில்லையம்பலம் 10,000-00, சி. எஸ். கே. கம்பனி 5,000-00, திரு. V. இராசசேகரம் 5,000-00, திரு. எஸ். கனகசபை 1,001-00. திரு. எஸ். சிவகுருநாதபிள்ளை, 1,001-00 தெல்லிப்பளை (பன்னாலை) 1,076-00, ஏழாலைதெற்கு 3,227-00, மல்லாகம் 1,200-00, சாவகச்சேரி (காரியாதிகாரிபகுதி) 4,526-50, கோப்பாய் 2,006-24, சுன்னாகம் (ஓர்பிரிவு) 2,185-50, அச்சுவேலி 2,278-30 நீர்வேலி 350-00, வட்டுக்கோட்டை இந்துககல்லூரி 600-00, பரமேசுவரக்கல்லூரி 441-00, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 50-00 மெய்கண்டான்பாடசாலை பண்ணாகம், 65-00, வடபகுதி விவசாயக் கந்தோர் 70-00, ஐக்கியலாபநிதிக் கந்தோர் 70-00, கூட்டுறவு வங்கி,யாழ்ப்பாணம்65-00, சிறுபகுதியாகப்பெற்றதொகை 3,577-00

ஆக மொத்தத்தொகை 43, 762-54.

திருப்பணிவேலை விரைவில் ஆரம்பிக்கப்படும். இவ்வேலையைச் செய்வதற்கு ஸ்தபதிகள் தமிழ்நாட்டிலிருந்து அண்மையில் வந்து சேர்வார்கள். திருக்கேதீச்சரத்திற் சிவபூசைமடக்கட்டிட வேலையும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. சிவராத்திரிக்குமுன்னர் ஓரளவில் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

---

"தித்திக்கும் தெள்ளமுதைச் சித்தாந்தத் துட்பொருளை
முத்திக்கு வித்தை முதல்நினைப்ப தெக்காலம்?"

"நீரிற் குமிழிபோல் நிலையற்ற வாழ்வைவிட்டு உன்
பேறில் கருணை வெள்ளப் பெருக்கெடுப்ப தெக்காலம்?"

"அன்புதனை யுருக்கி அறிவைஅதன் மேற் புகட்டித்
துன்பவலைப் பாசத் துடக்கறுப்ப தெக்காலம்?"

"அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறைவா பராபரமே?".

---

இவ்வாரம் 21-2-65 — 27-2-65

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பழைய முதலீடுகளால் பயன். பிறரால் உதவி. பகைவர்க்குத் தோல்வி, திங்கள் பிற்பகல் செவ்வாய் புதன் கவனம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

குடும்பக்குழப்பம், செலவு அதிகம். வெற்றிக்குக கடுர்உழைப்பு வேண்டும். வியாழன் வெள்ளி சனி வரை கவனம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

உறவினரால் தொல்லை. தந்தை சுகம் குன்றும். பண வரவு. பழைய மூதலீடுகளால் பயன்,

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

பண வரவு. கிலங்களால் நன்மை. நிம்மதிக்குறைவு. குடும்பத் தொல்லை. அலுவலகத்தில் குழப்பம்,

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்பக் குழப்பம். புதுத் தொழில்களில் தாமதம், எனினும் வெற்றி. உட்பகைவர்களால் குழப்பம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

அதிக செலவு. சில எதிர்ப்புகளுக்கு ஆளாவீர் தந்தை வழி உறவினரால் தொந்தரவு. பகைவர்க்கு வெற்றி.

**துலாம்**, சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

தொழிற்துறையில் வெற்றி, நிலங்களால் நன்மை. நிம்மதிக் குறைவு. சுகக்குறைவு.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

குடுப்பக் குழப்பம். உரிமை இழப்பு. உறவினர் தொல்லை, ஊர்திகளால் செலவு,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

பொதுவாக நல்ல கிழமை எதிர்ப்புகளைச் சமாளித்தல் பொது வாழ்வில்வெற்றி. காரிய சித்தி. புகழ்வரவு.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

பண வரவு. வெற்றிக்குக் கடும் உழைப்பு. நண்பர்களிடம் கருத்து வேறுபாடும் கலகமும்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

நிம்மதிக்குறைவு, குடும்பக் குழப்பம், சுகக்குறைவு, அடக்கம் அவசியம்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதிரேவதி. 1, 2, 3ம் பாதம்

பண வரவு, கமத்தொழிலில் நன்மை, பகைவர்க்குத் தோல்வி. கண் நோய் நிகழக் கூடும்,

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைதீவு மேற்கு,
வயித்திலிங்கம் காசிப்பிள்ளை
—வழக்காளி

இல. M.B. 6642

எதிராக

தொல்புரம், முருகேசு கந்தையா
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 6642-ம் இலக்க வழக்கில் எனக்குககிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக காணியை 1965-ம்ஞு பங்குனிமீ 27-ம்உ சனிக்கிழமை(27-3-65) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை-முதல்வட்டி ரூபாய் 7000. கோட்டுச் செலவு உட்பட இன்னும் 14-5-64 தொடக்கம் முழுதொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் இதில் ரூபா 100 கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேறகுப் பகுதி சங்கானை கோயிற்பற்று தொல்புரம் இறை, "மன்னு தோட்டம்' கில, பர. இலா, (4) நாலு கல்வீடும் குசினி, கிணறு பயிர்வகைகளும், எல்லை கிழக்கு நாகமுத்து அரியகுட்டியினதும் இராமு கைம்பெண் பொன்னுச்சியினதும் ஆதனம், வடக்கு இக்காணிககுரிய கை ஒழுங்கை, மேற்கு றோட்டு, தெற்கு கணபதியார் முருகேசுவினதும் பங்காளரினதும் ஆதனம், இதடங்கலும் இதன் கிழக்கேயுள்ள நாகமுத்து அரியகுட்டியின் ஆதனத்திலுள்ள கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும்.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.

19. வேம்படி வீதி
யாழ்ப்பாணம், 18-2-65.
M 277 19-2-65

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வரணி, இடைக்குறிச்சி.
கோவிந்து குமாரசுவாமி
—வழக்காளி

இல. 2681

எதிராக

வரணி, சின்னவன் கந்தன்
—எதிராளி

நாவற்காடு, சித்தர் வல்லிபுரம்
— கூட்டு எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டின் 2681-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1965-ம்ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 18-ம் திகதி (18-3-65) வியாழக்கிழமை முற்பகல் 9½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 400-ம், இதற்கு 24-5-63 திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 155-85 சதம். மொத்தம் ரூபா 592-55 சதம்

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி வரணிக்கோவிற்பற்று கரம்பக் குறிச்சியிறை"மாலானன்வளவு" நிலப்பரப்பு 14½-ம் பனைகள் வடலிகளும் மற்றும் பயிர்களும். எல்லை கிழக்கு சின்னப்பன் கைம்பெண் சடைச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு சின்னப்பன் கைம்பெண் சடைச்சிக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம்- இதில் சொரியலாய் அரைவாசி(½) முற்பதிவு F 277/215.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer &
Licensed Auctioneer.
தெல்லிப்பழை, 10-1-1965,
M 270 11-2-65.

---

### சிவப்பிரகாசம்

( 2-ம் பக்கத்தொடர்ச்சி )

இங்ஙனம் சூத்திரம் பன்னிரண்டும் வகுத்து, 'நிலவுலகாயதாதி' என்னும் விருத்தமொன்றும் இந்நூலின் கருத்தாகவும் 'திருவருள் கொடுத்து' என்னும் விருத்தமொன்றும் சீடனுக்கு நூலும் பொருளும் கொடுக்கு முறையாகவும் வகுத்து இந்நூல் அருளிச் செய்ததென அறிக. ஆக, இங்ஙனம் சூத்திரங்கள் வகுத்ததற்கு மேல் எழுதுகிற வியாக்கியானததிலே அந்தந்த அதிகாரங்கள்தோறுஞ் சிவஞான போதத்திலும் சிவஞான சித்தியிலும் வரும் சூத்திரத்தின் ஏதுக்களும் காட்டி எழுதுகிற முறைமையிலே சூத்திரம் பன்னிரண்டுங் கண்டுகொள்க. (வளரும்)

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

சங்கானை கிழக்கு,
1. காலம் சென்ற பொன்னையா தங்கராசா
சங்கானை கிழக்கு,
2. பொன்னையா தங்கராசா கைம்பெண் பரமேஸ்வரி தானுகவும் மைனர் அற்ற கமலகாந்தனின் தததுவகாறியாகவும
—வழக்காளிகள்

எதிராக

மாககற் ஒழுங்கை, உடுப்பிட்டி
1. குமாரசாமி காதசாமியும்
2, பெண் றோஸ் அம்மாவும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B. 5470-ம் இலகக வழககில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி, பின்னால் விபரிக கப்படும் ஒருதுண்டுக் காணி 1965-ம் ஞு பங்குனி மீ 18 உ வியாழககிழமை பிற்பகல் 4½ மணி தொடக்கம் அந்தக்காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 1043/28-ம் 8-3-63 திகதி தொடக்கம் 30-10-63 திகதி வரைக்கும் ரூபாய் 966-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத தொகைக்கும் இறுககும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 225-56 சதம்.

ஆதன விபரம்:

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகமம்மேற்கு சங்கானைகோவிற்பற்று சங்கானை கிழகது இறை, "கலுவன் தோட்டம்" கிலப்பரப்பு 3 குளி 8 செய்பயிர்களும் வான்பயிர்களும், வடககு எல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் அரைப்பங்கும் தூர்வையும் 4 முள அகலமுள்ள பாதை உரித்தும். எல்லை கிழககு ஒழுங்கை. வடக்கு நாகமுத்து பெண் சின்னம்மாவுக்குரிய ஆதனம். மேற்கு கனகசபை இராசாவுக்குரிய ஆதனம், தெற்கு அம்பலவ கணபதியாருக்குரிய ஆதனம். இதடங்கலில் சொரியலாய் இரண்டு கிலப்பரப்பும் அதைச்சேர்ந்தவைகளும் விற்கப்படும்.

ந, ஆறுமுகம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
சித்தங்கேணி
16-2-1965.
M. 274 19-2-65

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 3826

கந்தர் செல்லப்பா கைம்பெண்
சிவககொழுந்து, இணுவில்
—வழககாளி

எதிராக

பொன்னையா சிதம்பரநாதன்.
இணுவில் —எதிரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B, 3826-ம் இலகக வழக்கில் எனககுக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1965-ம ஆண்டு பங்குனி மாதம் 20-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 8185-ம் 4-1-61 தொடககம் 29-5-61 வரையில் ரூபா 7400-க்கு 7 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும்வரையில் முழுத் தீர்வைத் தொகைக்கு 5 வீத வட்டியும். முத்திரைச் செலவு ரூபா 66/10-ம்- இத்தொகையில் ரூபா 1200 கொடுபட்டது,

ஆதனடாப்பு-

வடமாகாணம் யாழ்ப்பாணப் பகுதி வலிகாமம் வடக்கு உடுவில் கோவில்பற்று இணுவில் இறை, "வட்டுவினியும் காட்டுப்புலமும்' பரப்ப கில லாச்சம் 15¾-ம், கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும், வான்பயிர், செய்பயிர்களும், இந்த கில, பர, 15¾-க்கு எல்லை கிழக்கு கந்தர் செல்லப்பாவின் ஆதனமும், இணறும், ஆறுமுகம் சின்னையாவினதும் செல்லப்பா சேனாதிராசாவினதும் ஆதனங்கள், வடககு ஒழுங்கை, மேற்கு கந்தர் செல்லப்பாவினதும் சின்னையா பெண் சிதம்பரத்தினதும், காலஞ்சென்ற வயித்திலிங்கம் சரவணமுத்துவின் உரிமைககாரரினதும மறுபெயர்களுடைய ஆதனங்கள். தெற்கு பதஞ்சலி பெண் சிவபாக்கியத்தினதும் கந்தசுவாமி கோவிலின் தருமசாதன ஆதனமும். இந்த முழுக் காணியில் மேலே கூறப்பட்ட எல்லைகளின்படி சொரியலாய் அரைவாசியும் அதைச்சேர்ந்தவைகளும்,

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
முருகன் இல்லம்,
இணுவில், 8-2-65.
M 276 19-2-65.

---

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாபநிதி —

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

**சேமிப்புப் பற்றுவரவு.**

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை நாவலர் கோட்டம் ... வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 19-2-1965 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org